O.S. No: 170/2018
பெயர்: முகமது ஆரிப்
**பி.சா. 1**
04-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 1.05**

**குறுக்கு விசாரணை**

எனக்கு தொழில் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட். 20 வருடங்களாக ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். இந்த வழக்கு எதற்காக போட்டிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் கடன் வாங்கியதற்காக போட்டிருக்கிறார்கள். நான் 11ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரி. வா.சா.ஆ.1ல் உள்ள விவரங்கள் தெரியும். இது சார்பதிவாளர் முன்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரி. சார்பதிவாளர் முன்பாக என்னை யார் கையெழுத்திட சொன்னது என்றால் மோகனசுந்தரம் சொன்னார். என்னுடைய மனைவி கையெழுத்து போட்டார். சார்பதிவாளரிடம் என்னை மிரட்டி கையெழுத்து வாங்குவதாக என் மனைவி புகார் எதுவும் சொல்லவில்லை. வா.சா.ஆ.1 பொய்யான ஆவணம் என்று நானோ என் மனைவியோ இதன் மீது வேறு நடவடிக்கை எதுவும் எடுத்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் தான் கட்சி செய்கிறோம். வா.சா.ஆ.2 ல் உள்ளது என் மனைவியின் கையெழுத்துதான். அது கடனுக்காக போடப்பட்ட கையெழுத்து. அது கடனுக்காக என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் நான் படித்துப்பார்க்கவில்லை. வா.சா.ஆ.2 ன் தன்மையை பற்றி நான் பேச முடியாது அதை நான் படிக்கவில்லை என்றால் அறிவிப்பிற்கு பின்னர் தான் தெரிந்து கொண்டேன். அறிவிப்பிற்கு பின்னராவது நான் இந்த ஆவணங்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. என் மனைவி உண்மையாக இந்த ஆவணங்களை எழுதி கொடுத்ததால் தான் இவற்றின் மீது எந்த நடிவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பாலன் சிட் பண்டிற்கும் , சம்சாத் பேகத்திற்கும் சம்மந்தம் எதுவும் இல்லை என்றால் சரி. கடன் வேண்டும் என்றால் என்

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

மனைவி எழுதிக்கொடுக்க வேண்டும் என்று சொன்னதால் கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ளார். கடன் கொடுப்பதற்கு என் மனைவி கையெழுத்து போட்டால் தான் கொடுப்பேன் என்று சொல்வதற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா என்றால் வாய்மொழியாக சொன்னதுதான் எழுத்து மூலமான ஆதாரம் இல்லை. என் மீது திருவிடைமருதூர் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு ஒன்றும், காசோலை மோசடி வழக்கு இரண்டும் உள்ளது. கும்பகோணத்தில் இந்த வழக்கை தவிர வேறு வழக்கு நிலுவையில் இல்லை. Halid Hassan வழக்கு முடிந்துவிட்டது. உயர்நீமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அது பார்ட்னர்சிப் சம்மந்தப்பட்ட வழக்கு. நான் பல நபர்களிடம் வரவு செலவு வைத்திருக்கிறேன் என்றால் இல்லை. இந்த வழக்கில் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள விவரங்களுக்கு தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர மற்ற விவரங்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரி. வாதியின் சகோதரர் நிறுவனத்திற்கு கொடுக்க வேண்டிய தொகைக்காகத்தான் இந்த ஆவணங்கள் எழுதப்பட்டது என்று நான் சொல்லும் வாய்மொழி சாட்சியம் தவிர வேறு எழுத்து மூல ஆவணம் இல்லை என்றால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளவை தான் ஆவணங்கள். வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் உள்ள விவரங்கள் மற்றும் அதில் எழுதியுள்ள விவரங்கள் தெரியாது என்றும், காலநீட்டிப்பு சம்மதிக்கவில்லை என்றும், மேலும் கடன் பெறுவதற்காக ஒரு பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்று நான் சொல்லியுள்ள கூற்றுகளுக்கு என்னுடைய வாய்மொழி சாட்சியத்தை தவிர வேறு ஆதாரங்கள் இல்லை என்றால் சரி. வா.சா.ஆ.1,2 ஐ பொருத்து என் மனைவி பணம் வாங்கவில்லை என்று சொல்லியுள்ளதற்கு வாய்மொழி சாட்சியத்தை தவிர வேறு ஆதாரம் இல்லை என்றால் சரி. என் மனைவி நீதிமன்றத்திற்கு வரலாம் என்றால் அவர் உடல்நிலை சரியாக இருந்தால் வரலாம். என் மனைவி நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மையை ஒப்புக்கொண்டுவிடுவார் என்பதற்காக நான் பவர் வாங்கி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாலன் சிட் பண்டிற்கும் வாதிக்கும் சம்மந்தம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரி. பி.சா.ஆ.6 எனக்கும் சிட் பண்டிற்கும் நடந்த வரவு செலவு சம்மந்தப்பட்ட விவரம் என்றால் ஆமாம். பி.சா.ஆ.5 என் பெயரில் தான்

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

உள்ளது. பி.சா.ஆ.4 சிதம்பரத்தில் உள்ள பிளாட்டை என்னிடம் 2012ல் கார்த்திகேயன் விலைக்கு வாங்கிய ஆவணம். இந்த வழக்கிற்கும் அந்த ஆவணத்திற்கும் என்ன சம்மந்தம் என்றால் அவர்களிடம் வாங்கிய கடனிற்காகத்தான் இந்த ஆவணம் எழுதிகொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வாங்கிய கடனிற்கு எழுதிகொடுக்கப்பட்டதாக அந்த கிரய பத்திரத்தில் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரி. பி.சா.ஆ.3 என்ன ஆவணம் என்று எனக்கு தெரியவில்லை. படித்து பார்த்தும் என்ன ஆவணம் என்று எனக்கு தெரியவில்லை. பி.சா.ஆ.2ற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் அவர்கள் வரவு செலவு செய்து இவ்வாறு ஆவணங்கள் எழுதி வாங்குவார்கள் என்பதை காண்பிக்க இந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.2ல் நான் தரப்பினர் கிடையாது. எழுதிக்கொடுத்தவர் தான் அந்த ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து சொல்லமுடியும் என்றால் தெரியாது. பி.சா.ஆ.1 எதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள என்றால் கார்த்திகேயன், மோகனசுந்தரம், ரமேஷ் ஆகிய மூவரும் ஒன்று தான் என்பதை காண்பிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பாலன் சிட் பண்ட் தரப்பு ரசீதுகள் தான் என்றால் ஆமாம். சிட்பண்ட் சட்டப்படி இந்த ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி. வட்டிக்காக இந்த ரசீதுகள் கொடுக்கப்பட்டுள்ளது. வட்டிக்காக இவ்வாறு ரசீதுகள் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை நான் என் கட்சியில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ரமேஷ் என் மீது தனியாக ஒரு வழக்கு போட்டிருக்கிறார். அது திருவிடைமருதூர் நீதிமன்றத்தில் சிவில் வழக்காக உள்ளது. நான் சொத்தை விற்பதற்காக கிரய ஒப்பதந்தம் ஏற்படுத்திக்கொண்டு தற்போது வாதியை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பாக்கி கிரயத்தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் ஒப்புக்கொண்ட படி தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்க கடமைபட்டவர் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக கட்சி செய்கிறேன் எனறால் சரியல்ல. என் மனைவி வருமான வரி செலுத்துபவரா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்துபவரா என்றால் ஒரு காலத்தில் செலுத்தினேன். சட்டப்படி நான் ஒரு தனி நபர், என் மனைவி தனி நபர் என்றால் ஆமாம். தனி நபர்

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

என்ற முறையில் நான் செய்யும் எந்த வரவு செலவும் என்னை மட்டுமே சாரும் என்றால் எல்லோருமே பொறுப்பு. நான் பாலன் சிட் பண்டில் செய்துள்ள வரவு செலவு கணக்குகளை ஆதாயமாக வைத்து தற்போது இந்த கிரய ஒப்பந்தத்தை பொய்யாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மமந்தமும் இல்லை என்றாலும், என் மனைவி தான் இதில் சம்மந்தப்பட்டவர் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 1.51**

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/- J. Radhika
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.